செய்தி வெளியீடு எண்:799 நாள்:28.09.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

**கிரேட் லேக்ஸ் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவனர் பேராசிரியர் திரு. பாலா வி. பாலச்சந்திரன் அவர்கள் மறைவையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் முகநூலில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி.**

மேலாண்மைத்துறையில் சிறந்து விளங்கிய கல்வியாளரும், இந்தியாவின் பிரபல கிரேட் லேக்ஸ் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவனருமான பேராசிரியர் திரு.பாலா வி. பாலச்சந்திரன் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து பெரிதும் வேதனையடைந்தேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

•••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9